**செய்தி வெளியீடு எண்:551** **நாள்: 24.08.2017**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (24.8.2017) தலைமைச் செயலகத்தில், கேரள மாநிலம், கொல்லத்தில் 6.8.2017 அன்று ஏற்பட்ட சாலை விபத்தில் திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், சமூகரெங்கபுரம் கிராமத்தைச் சேர்ந்த உயிரிழந்த திரு.முருகன் அவர்களின் மனைவி திருமதி முருகம்மாள் அவர்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 5 லட்சம் ரூபாய்க்கான காசோலையையும், இவ்விபத்தில் காயமடைந்த திரு. முத்து அவர்களின் சார்பில் அவரது அண்ணன் திரு.மகாராஜன் அவர்களிடம் 50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையையும் வழங்கினார்கள்.

கேரள மாநிலம், பாரிப்பள்ளி – கொல்லம் சாலையில் 6.8.2017 அன்று ஏற்பட்ட சாலை விபத்தில், இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், சமூகரெங்கபுரம் கிராமம், மஜரா துரைகுடியிருப்பு மேலூரைச் சேர்ந்த திரு.கணபதி என்பவரின் மகன் திரு. முருகன் என்பவர் உயிரிழந்தார். மேலும், இந்த சாலை விபத்தில் திரு.முத்து என்பவர் பலத்த காயமடைந்தார்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த திரு. முருகன் அவர்களின் குடும்பத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொண்டதோடு, உயிரிழந்த திரு.முருகன் அவர்களின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 5 லட்சம் ரூபாயும், காயமடைந்த திரு. முத்து அவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாயும் நிவாரண நிதி வழங்கப்படும் என்றும் 17.8.2017 அறிவித்தார்கள்.

அதன்படி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று, சாலை விபத்தில் உயிரிழந்த திரு.முருகன் அவர்களின் மனைவி திருமதி முருகம்மாள் அவர்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 5 லட்சம் ரூபாய்க்கான காசோலையையும், காயமடைந்த திரு. முத்து அவர்களின் சார்பில் அவரது அண்ணன் திரு.மகாராஜன் அவர்களிடம் 50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையையும் வழங்கினார்கள்.

இந்த நிகழ்வின்போது, ராதாபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.ஐ.எஸ். இன்பதுரை, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப, ஆகியோர் உடனிருந்தனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.**
**நாள் : 24.8.2017**